மாண்புமிகு திரு. ஆர். செளந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர் மட்டக் குழுவினுடைய பரிந்துரையின் மீது 1,500 ரூபாய் மானியமாகவும், 1,500 ரூபாய் கடனாகவும் வழங்கப்பட வேண்டுமென்ற அந்தக் கோரிக்கை பம்பாயிலிருந்து கதர் வாரியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது. மற்றொன்று, மின் துறைக்கு தரப்படுகிற அந்தக் கட்டணத்தை 0.15 பைசாவாக மாற்ற மின் இலாக்காவை அணுகி இருக்கிறார்கள்.

நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் மண்பாண்டத் தொழில் மையம் அமைத்தல்

195—(*வினா எண் 9744) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் கார்குறிச்சியில் சுமார் 6 லட்சம் மதிப்பீட்டில் மண்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு மையம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். செளந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இப்பொழுது் தொழிற்கூடம் கார்குறிச்சியில் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், விரைவில் இப்பணிக்கூடம் கட்டி முடிக்கப்படும் எனவும் கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திருவிடைமருதூர் தொகுதியில் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை அமைத்தல்.

196—(*வினா எண் 12034) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கதர் வாரியத்தின் மூலம் கதர் பாலியஸ்டர் தொழிற்சாலை திருவிடைமருதூர் தொகுதியில் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[முற்பகல் 11-00]

2. தகவல் கோரல்

(அ) ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஏற்பட்டுள்ள தீ விபத்து.

திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு கண்ணியத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஆயிரம் விளக்குச் சட்டப் பேரவைத் தொகுதியில், 106-வது வட்டத்தில் சுதந்திரா நகர் என்ற பகுதியில், ஆதிதிராவிடர்கள் அதிகமாக வாழ்கிற அந்தப் பகுதியில், 25-3-1987 அன்று காலை 11 மணியளவில் ஒரு பெரிய தீ விபத்து நிகழ்ந்துள்ளது. அதன் காரணமாகப் பல நூறு குடும்பங்கள் சொல்லொணாத் துயரத்திற்கு இன்று ஆளாகி யுள்ளனர். மாண்புமிகு எங்கள் இனிய தலைவர் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்களின் துணையுடன் நேற்று சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் (நாத் தழுதழுக்க) மற்றவர்கள் உதவி யுடன் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு ஓரளவுக்கு அந்தப் பகுதி மக்கள் உதவி பெற்றுள்ளார்கள். ஆனால் இன்று காலை பத்திரிகைகளில் பல்வேறு விதமான தகவல்கள் வெளியாகி யுள்ளன. எனவே உண்மை நிலவரங்களை இந்தப் பேரவை அறிய வும் — தீ விபத்துக்கு ஒரு குறிப்பிட்ட சிலரின் திட்டமிட்ட சதி காரணம் என்று பரவலாக அந்தப் பகுதியில் வாழ்கிற ஆதி திராவிட குடிசைவாழ் மக்கள் கூறுவதனால் அதில் ஏதாவது அடிப்படை உண்டா என்பதைக் குறித்தும் அரசு இதுவரை அங்கு எடுத்துள்ள, இனி எடுக்க இருக்கிற நிவாரண நடவடிக்கை கள் குறித்தும் அருள்கூர்ந்து ஒரு முழுமையான அறிக்கையை இந்தப் பேரவைக்கு அளித்து ஆயிரம் விளக்குத் தொகுதி மக்களுக்கு ஒரு புதிய நம்பிக்கையை அளிக்க மாண்புமிகு அண்ணன் டாக்டர் நாவலர், நிதியமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.